அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு கட்டிடங்கள் கட்ட இலவச நிலம் வழங்கல்.

536—(*வினா எண். 10326) திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவக் கல்லூரிக் கட்டிடம், பொறியியல் கல்லூரிக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு புறம்போக்கு நிலம் இலவசமாக வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிலம் வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

சென்னையிலுள்ள குதிரைப் பந்தய மைதானம்.

537—(*வினா எண். 10364) திருமதி பா. வளர்மதி: மாண்பு மிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள குதிரைப் பந்தய மைதானத் திற்குக் கொடுத்துள்ள நிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு அவர்கள் கொடுக்கும் பணம் எவ்வளவு?

(ஆ) எத்தனை வருடங்களுக்கு அவர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னையிலுள்ள குதிரைப் பந்தய மைதானத்திற்கு கொடுத்துள்ள நிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு அவர்கள் ரூ. 614.97 குத்தகை வரியாக செலுத்து கிறார்கள்.

(ஆ) 25—10—1945-ம் நாளிலிருந்து 30—3—2044-ம் நாள் வரை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள குதிரைப் பந்தய மைதானத்தில், தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள், அறிவித்துள்ள

30 இலட்சம் வீடுகளைக் கட்டுகின்ற திட்டமாக, வீட்டுவசதி வாரியம் வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டில் அரசு தமிழ் நாட்டில் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க ஆணையிட்டது. டில்லி உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு குதிரைப் பந்தயம், பந்தயம் கட்டுவதை ஒழிக்கும் சட்டம் 1974 மற்றும் சென்னை குதிரைப் பந்தயம் குழுச் சட்டம் 1986 ஆகியவற்றின் செயல் திறனை எதிர்த்து, பல வழக்குகள் நிலுவையில் இருப்பதால், அவற்றின்மீது முடிவு தெரிந்தபின், குத்தகைக்கு அளித்த நிலங்களை இதர பொது நோக்கங்களுக்காக அளிக்க பரிசீலனைக்கு வரும். அதுவரை எந்தவிதமான முடிவையும் நாம் எடுப்பதற்கில்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயப் பிரியர்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்று ஆடுகிறார்கள். நமது மாநிலத்தினுடைய வருவாய் அங்கு சென்று விடுகிறது. எனவே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட Turf Agent நியமனம் செய்யப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதற்கு இங்கேயே குதிரையை ஓட்டிவிடலாம். இவ்வளவு கஷ்டம் வருவதற்குப் பதிலாக ரூ. 3½ கோடி, ரூ. 4 கோடி வருமானமாவது வரும். இதை ஒரு கொள்கை என்ற அடிப்படையில்தான் தடுத்து நிறுத்தியிருக்கிறோம். அப்படி ஏற்பாடு செய்யும்போது, அதற்கு ஆக்கம் தருகிறோம் என்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடும். ஆகவேதான் இதிலே எந்தெந்த வகையில் வரலாம் என்பது கொள்கையினுடைய அடிப்படையில் முடிவு கட்ட வேண்டிய ஒன்றாக இருப்பதன் காரணமாக, அதற்கு ஆக்கம் தருகின்ற எந்த முயற்சிக்கும் அரசு ஈடுபாடு கொள்வதற்கில்லை.

1987 ஏப்ரல் 29]

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தய சங்கத்திற்கு வழங்கப் பட்டிருக்கின்ற மொத்த இடத்தின் பரப்பளவு எவ்வளவு? அதே இடத்திற்கு அதிகமாகவே அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 160.86 ஏக்கர் நிலம் அவர்களுக்குக் குத்தகையாக 99 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதைவிடக் கூடுதலாக ஆக்கிரமித்திருக்கிறார்களா என்ற விவரம் என்னிடம் இல்லை. அப்படி ஆக்கிரமித்திருப்பார் களேயானால், அதுபற்றி தனி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றமும், தலைமைச் செயலகமும், தற்போது மைய அரசுக்குச் சொந்தமான சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இயங்கிக் கொண்டி ருக்கின்றன. எனவே, தமிழக அரசு இந்த குதிரைப் பந்தய சங்கத்திடமிருந்து அந்த நிலத்தைப் பெறுகின்ற நேரத்திலே, நம்முடைய சட்டமன்றத்தையும், சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதிகளையும், என் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களையும் ஒரே இடத்தில் கட்டுவோமேயானால், பல்வேறு வசதிகள் பெற வாய்ப்பாக இருக்குமென்ற காரணத்தினால், அரசாங்கம் அதை எடுக்கின்ற நேரத்திலே, இதை ஆராயுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 160.86 ஏக்கர் நிலப்பரப்பு அங்கே யிருக்கிறது. அதை முழுவதையும் அரசாங்கத்திற்காகக் கையகப்படுத்தி, அரசாங்கத்திற்குச் சொந்தமாக்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, நாமே பயன்படுத்துகின்ற நிலைமை ஏற்பட்டுவிடுமேயானால், எல்லோரும் விரும்புவார்களேயானால், அதையெல்லாம் செய்வதற்குக்கூட ஒட்டுமொத்தமாக ஒரே இடத்தில் கொண்டு போவதுகூட வசதியாக இருக்கும். அது

நல்ல யோசனை. ஆனால் அந்த யோசனையை எந்த அளவிற்கு நிறைவேற்றமுடியும் என்று உறுதிமொழி சொல்ல இயலாது. அந்த யோசனையை பல்வேறு யோசனைகளின் அடிப்படையிலே வைத்து நாம் பரிசிலிக்கலாம்.

மாநில அரசு ஊழியர்களின் ஊதிய விகிதம்.

538—(* வினா எண். 12102) திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் ஊதிய விகிதங்களை மாநில அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் இல்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மாநில அரசு ஊழியர்கள் தொடர்ச்சியாக நீண்டகாலமாகவே மத்திய அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கும்படியான அதே சம்பள விகிதங்களையும் மற்றவிதமான பண ரூபத்தில் இருக்கும்படியான சலுகைகளையும் கொடுக்கும்படி கேட்டு வருகிறார்கள். அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லையா? அமைச்சர் அவர்கள் இப்போது செயற் குறிப்பு அரசிடம் இல்லை என்று சொன்னார்கள். அதை இனிமேலாவது கவனத்தில் எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பொதுவாக மாநிலத்திற்கு மாநிலம் அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்கள் மாறுபட்டு உள்ளன. ஒவ்வொரு மாநில அரசும் மாநிலத்தின் நிதி நிலைமை, வேலைவாய்ப்பு அளிக்கும் தன்மை, ஊழியர்களின் எண்ணிக்கை போன்றவற்றை கருத்திலே வைத்துக்கொண்டு ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்களை மாநில அரசுகள் நிர்ணயித்து வருகின்றன இந்தியாவில் 22 மாநிலங்களுடைய ஊதிய விகிதமும் ஒரே விதமாக அமையவில்லை. மத்திய அரசு ஊழியர்களின், மாநில அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்கள் ஒன்றேபோல் இருக்க வேண்டும் என்கின்ற ஒரு விதி முறையும் இல்லை. அந்த அடிப்படையிலேதான் அவரவர்கள் அந்த அந்த மாநிலத்தினுடைய